**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 24/2017**

**Deposition of Witnesses for PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.முத்துராமலிங்கம் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **10.12.2024.**

**எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞரும் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 15.08.2015ம் தேதி நான் கேணிக்கரை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது கேணிக்கரை காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பு நகர் காவல் நிலைய ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் ஆய்வாளர், நான், மற்றும் த.கா.அருணகிரிநாதன், த.கா.ராஜேந்திரன், ஆகியோருடன் போதை பொருள் விற்பனை செய்வதாக வாழாந்தரவை கிராமத்தில் கிழக்கு பக்கம் உள்ள மாரியம்மன் கோவில் கண்காணித்து வந்தபோது அங்கு 2 ஆண்கள், 1பெண் நின்றுக்கொண்டிருந்தார்கள். போலீஸ் பார்ட்டியை கண்டதும் ஓட எத்தணித்தவர்களை மடக்கி ஒருவரை பிடித்து பின்னால் பெயர், ஊர் கேட்டு தெரிந்த ராஜா என்பவரிடம் ஆய்வாளர் விசாரணை செய்தபோது தன்னுடன் நின்றுக்கொண்டிருந்தவர் வாழாந்தரவை சேர்ந்த கார்த்திக் என்றும், அந்த பெண் சுரேஷ் மனைவி செல்வராணி என்றும் தெரிவித்தார். பின்பு ஆய்வாளர் அந்த இடத்தில் சாட்சிகள் திருமூர்த்தி, அருணகிரி ஆகியோர்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னிடம் கார்த்திக் என்பவர் கஞ்சாவை வாங்கி விற்றுக்கொடுப்பதாக அதை தான் விற்று அந்த பணத்தை கார்த்திக்கிடம் கொடுப்பதாகவும் அதற்கு கூலி கொடுப்பதாகவும் தெரிவித்தார். ஆய்வாளர் அதே இடத்தில் ஒரு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து, அவர் மறைத்து வைத்திருந்த கருவேளமரத்தின் பின்புறம் மறைத்து வைத்திருந்த டி.என்.65 ஞ 7443 பைக்கில் ஒரு கட்டைப்பையில் 1.500 கி கஞ்சா எடுத்து ஆஜர் செய்தார். அதை அத்தாட்சியின் பேரில் கைப்பற்றி தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.500 கி கஞ்சா இருந்தது. அந்த அத்தாட்சியில் சாட்சிகள் திருமூர்த்தி, அருணகிரி ஆகியோர்கள் கையெழுத்து செய்தார்கள். ஒரு

பாக்கெட்டில் 5 கிராம் வீதம் மொத்தம் 20 கிராம் மாதிரிக்கு எடுத்து, எதிரி மற்றும் சொத்துக்களுடன் 15.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து கேணிக்கரை காவல் நிலைய கு.எண்.379/2015 பிரிவு 8© r/w 20(b)(ii)(B) NDPS Act – ஆக வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் ஆவணங்களில் எதிலும் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்களை எதையும் நான் என் கைப்பட எழுதவில்லை. அனைத்து ஆவணங்களையும் யார் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு வந்ததாக அத்தாட்சியில் குறிப்பு எதுவும் இல்லை. கைது குறிப்பாணையை வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு எழுத்துக்களாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் கையெழுத்து செய்த அருணகிரி, திருமூர்த்தி ஆகியோர்கள் வாழாந்தரவை கிராமத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்பது தெரியாது. ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் தான் சென்றோம். சோதனை ஜாபிதாப்படி சோதனை செய்தது ஆய்வாளர். சோதனை ஜாபிதாவில் சாட்சி கையெழுத்து யாரிடம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் ஆய்வாளர் ரைடுக்கு செல்லவில்லை என்றும், எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றும் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.